# தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி சேர்க்கை–2024
## தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025
## 2024–25–ஆம் கல்வி ஆண்டிற்கான பட்டயப்படிப்பு மாணாக்கர்கள் சேர்க்கை
## (தமிழ்நாடு மாணாக்கர்களுக்கு மட்டும்)

**விளம்பர அறிக்கை எண். 14514/ஐ–1/2024, நாள் : 03.05.2024**

தமிழ்நாடு அரசின் அனைத்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பிற்கு விண்ணப்பிக்கவும், சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யவும் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை: https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவுசெய்ய வேண்டும். இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் மாவட்ட சேவை மையங்கள் (TNEA Facilitation Centre) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

**கல்வித் தகுதி :**

**நேரடி இரண்டாமாண்டு பட்டயச் சேர்க்கை : (Direct Second Year Diploma Admission)**

மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், கீழ்க்கண்ட பாடப்பிரிவுகளில் ஏதேனும் மூன்று பாடப்பிரிவுகள் பயின்றிருக்க வேண்டும்.

Passed 10+2 examination with Physics / Mathematics / Chemistry / Computer Science / Electronics / Information Technology / Biology/ Informatics Practices/ Biotechnology / Technical Vocational subject / Agriculture/ Engineering Graphics / Business Studies / Entrepreneurship.

(அல்லது)

10–ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 2 ஆண்டுகள் தொழில் பிரிவில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (10th std passed and 2 years ITI passed in any branch of Engineering and Technology)

**பதிவுக்கட்டணம்** : பதிவுக் கட்டணமான ரூ.150/–ஐ விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதள வாயிலாக செலுத்தலாம்.

SC/ST பிரிவினர் பதிவுக் கட்டணம் செலுத்த அவசியமில்லை.

| | |
|---|---|
| நேரடி இரண்டாமாண்டு பட்டயப் படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள் | 06.05.2024 |
| நேரடி இரண்டாமாண்டு பட்டயப் படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் | 20.05.2024 |

12–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் / ITI மதிப்பெண் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், சிறப்பு பிரிவினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் புகைப்படம் ஆகியவை தேவையான அளவுகளில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

அனைத்து தகவல்கள், வழிகாட்டி மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை மாணாக்கர்கள் **https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

ஒம்./– கொ. வீர ராகவ ராவ்
தொழில் நுட்பக்கல்வி ஆணையர்